## <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 161/2020        ராமசாமி  (வாசா1)  தேதி:20.08.2024</u>**

**<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக நான் குறிப்பிட்டுள்ள நிலையில் வாசாஆ.19 முதல் வாசாஆ.23 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்தில் எந்த பகுதிக்கு செலுத்தியுள்ளேன் என்றால் மொத்த சொத்திற்கும் செலுத்தியுள்ளேன். 2018,2019 வருடங்களுக்கு செலுத்திய பயிர் காப்பீடு ஆவணம் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே என் கைவசம் இருந்தது என்றால் சரிதான். நான் பயிர் காப்பீடு செலுத்தியது சம்பந்தமாக எனது பிராது , அறிவிப்பு, நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சி தானாக முன்வந்து அந்த சமயத்தில் மேற்படி ஆவணங்கள் கிடைக்கவில்லை என்றும் அதனால் குறிப்பிடவில்லை என்றும் கூறுகிறார். வழக்கிற்கு முன்பே பயிர் காப்பீடு செலுத்தியுள்ள விவரம் எனக்கு தெரியும் என்ற நிலையில் அது பற்றிய விவரங்களை எனது பிராது , அறிவிப்பு, நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.2023 ம் வருடத்திற்கு சுமார் 6 ஏக்கர் சொத்திற்கு மட்டும் காப்பீடு செய்ததாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 6 ஏக்கர் நிலம் என்பது மொத்த 12 ஏக்கர் நிலத்தில் எந்த பகுதியில் உள்ளது என்றால் நான் தென்பகுதியில் உள்ள 6 ஏக்கர் நிலம் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் தென்புறம் 6 ஏக்கர் நிலத்திற்கு பயிர் காப்பீடு செய்ததாகவோ பயிர் சாகுபடி செய்ததாகவோ துலங்காது என்றால் சரிதான். 2018 ம் வருட பயிர் அடங்கலில் 2.6 ஹெக்டேர் நிலம் அய்யப்பநாயக்கர் மகன் வேலுச்சாமி மக்காச்சோளம் பயிர் செய்ததாக உள்ளது என்றால் சரிதான். அந்த 2.6 ஹெக்டேர் நிலம் மொத்த 12 ஏக்கர் நிலத்தில் எந்தப்பகுதியில் உள்ளது என்றால் தென்பகுதியில் உள்ளது. மேற்படி வேலுச்சாமி என்பவருக்கு மேற்படி 2.6 ஹெக்டேர் நிலம் நான் குத்தகைக்கு விட்டதாக எனது அறிவிப்பு , பிராது, நிருபண வாக்குமூலம் ஆகியவற்றில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2020,2021,2022,2023 வருடங்களுக்கு உரிய பயிர் அடங்களில் சுமார் 6 முதல் 6 – 1/4 ஏக்கர் நிலத்திற்காக மட்டுமே பயிர் சாகுபடி செய்ததாக அந்த ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். அந்த பயிர் சாகுபடி ஆவணங்களில் நான்

சாகுபடி செய்யும் பகுதி எந்த பகுதியில் வருகிறது என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் வழக்கிடைச்சொத்து முழுவதிலும், 1,2 பிரதிவாதிகள் விவசாயம் செய்து வருவதாகவும், என் பாகத்திற்கு உரிய பங்கு செலவுகளை என்னிடம் இருந்து மேற்படி பிரதிவாதிகள் பெற்று விவசாயம் செய்து என் பங்கை என்னிடம் கொடுத்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு பின்னர் வழக்கிடைச் சொத்தில் எந்த பகுதியிலும் தனித்த சுவாதீனத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. நான் தனித்த சுவாதீனத்தில் ஒரு பகுதியில் உள்ளேன் என்றால் சரியல்ல. பிராது சங்கதிகள் , எனது சாட்சியத்திற்கு முற்றிலும் எதிராக, மோசடியாக வாசாஆ.19 முதல் 23 வரையிலான ஆவணங்கள் தற்போது தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

(ஒம்) D. மாரிக்காளை,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.